# திருவண்ணாமலை நகராட்சி
## அவசரக் கூட்டம்

13.07.2021ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண். | பொருள் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ந.க.எண்.2435/2021/அ2 நாள் 08.07.2021 கடிதத்தில், திருவத்திபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் லாரி ஓட்டுநராகப் பணிபுரியும் திரு.பி.கோபால் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக திருவண்ணாமலை நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு பணியிட மாறுதல் செய்ய கோரி விண்ணப்பித்துள்ளதாகவும், மேற்படி விண்ணப்பத்தினை திருவத்திபுரம் ஆணையாளர், அவர்களால் பரிந்துரை செய்து கருத்துரு சமர்ப்பித்துள்ளதாகவும், திருவண்ணாமலை நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு அன்னாரை மாறுதல் செய்யும் பொருட்டு திருவத்திபுரம் நகராட்சி நகரமன்ற தீர்மான எண்.367, நாள்:30.06.2021ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், திருவண்ணாமலை நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடத்திற்கு திரு.பி.கோபால் அவர்களை பணிமாறுதல் செய்துகொள்ள நகரமன்ற தீர்மான நகல் அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, திரு.பி.கோபால் அவர்களை திருவத்திபுரம் நகராட்சியிலிருந்து திருவண்ணாமலை நகராட்சியில் காலியாக உள்ள ஓட்டுநர் பணிக்கு பணியிட மாறுதல் செய்வதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2407/2021/எச்1 | **தீர்மானம் எண். 206 அனுமதிக்கப்பட்டது. ஓட்டுநர் பணியிடமாறுதல்** |
| 2 | அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், 7th Project Sanctioning Committee for Shelter for Urban Homeless ஆய்வுக் கூட்டத்தில், இந்நகராட்சியில் சாலையோரத்தில் வாழ்பவர்களுக்கு இரவு தங்கும் விடுதி கட்டிடம் கட்ட மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதிபெற செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல | **தீர்மானம் எண். 207 இரவு தங்கும் விடுதி கட்ட 2 இனம் 50 வீதிம் அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>இயக்குநரகம், வேலூர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சியின் வார்டு எண்.24 செங்கம் சாலையில் பழைய அரசு பொது மருத்துவமனை அருகில், சாலையோரத்தில் வாழ்பவர்களுக்கு இரவு தங்கும் விடுதி கட்டுதல்.</td><td>50.00</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சியின் வார்டு எண்.26 செங்கம் சாலை கட்டிட மையம் அருகில், சாலையோரத்தில் வாழ்பவர்களுக்கு இரவு தங்கும் விடுதி கட்டுதல்.</td><td>50.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>100.00</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.795/2021/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>தணிக்கை கட்டணம் அரசு ஆணை எண்.62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.01.1994 மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதிமுறைகள் 62(ஒ) மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 17ல் வெளியிட்டுள்ள திருத்தங்களின்படியும், 1992–93 முதல் தணிக்கை பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதரப் படிகள் 50% தொகை தணிக்கைக் கட்டணமாக நகராட்சி நிதியிலிருந்து அரசு நிதிக்கு செலுத்தப்பட வேண்டும். மேலும், தணிக்கை ஆண்டு 2019–2020 தணிக்கை பத்தி எண்.177 ன்படி ரூ.1,98,678/– (ரூபாய் ஒரு லட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து அறுநூற்று எழுபத்து எட்டு மட்டும்) செலுத்த தடை எழுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்.3079/2020/சி2</td>
<td>தீர்மானம் எண். 208<br>தணிக்கை கட்டணம்<br>ரூ.1,98,678/-</td>
</tr>
</table>

ஆணையாளர்,
திருவண்ணாமலை நகராட்சி.

# திருவண்ணாமலை நகராட்சி
## அவசரக் கூட்டம்

**28.07.2021ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள் விபரம்.**

<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள் விபரம்</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு சாலைவரி மற்றும் பசுமைவரி 01.04.2021 முதல் 31.03.2021 வரை கீழ்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான செலவினம் ரூ.41,831/- ஆகும். எனவே, மேற்படி தொகையினை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வாகன விவரம்</th><th>சாலை வரி</th><th>பசுமை வரி</th><th>வரித் தொகை</th><th>சேவை வரி</th><th>அபராத தொகை</th><th>WLF Tax</th><th>Common Tax</th><th>மொத் தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>TN 25 2969</td><td>-</td><td>505</td><td>10300</td><td>-</td><td>1288</td><td>130</td><td>130</td><td>12353</td></tr>
<tr><td>2</td><td>TN 25M 2863</td><td>-</td><td>-</td><td>3672</td><td>-</td><td>-</td><td>-</td><td>-</td><td>3672</td></tr>
<tr><td>3</td><td>TN 25C 0254</td><td>-</td><td>505</td><td>7500</td><td>-</td><td>750</td><td>91</td><td>150</td><td>8996</td></tr>
<tr><td>4</td><td>TN 25AL 9353</td><td>-</td><td>505</td><td>14200</td><td>-</td><td>1775</td><td>180</td><td>150</td><td>16810</td></tr>
<tr><td></td><td>மொத்தம் தொகை</td><td>-</td><td>1515</td><td>35672</td><td>-</td><td>3813</td><td>401</td><td>430</td><td>41831</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பொறியியல் பிரிவு அவசர அவசியம் கருதி மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.0978/2021/இ2</td><td>தீர்மானம் எண். 209<br>பொருள் எண்.209<br>பொறியியல் பிரிவு வாகனங்களுக்கு சாலைவரி, பசுமை வரி செலுத்த அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் விநியோகப் பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தரப் பணியாளர்கள் இல்லாததால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள 41 எண்ணிக்கையில் ஆடவர் குழுகள் (நேதாஜி ஆடவர் குழு மற்றும் இரமணா ஆடவர் குழு) நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் பணிகள் அவசியம் கருதி மேற்காணும் ஆடவர் குழுக்களுக்கு மாத ஊதியம் வழங்க ஜுன் - 2021 முதல் ஜுலை- 2021 வரை இரண்டு மாதங்களுக்கு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கும் மன்றத்தின்</td><td>தீர்மானம் எண். 210<br>ஆடவர்குழு 12 இலட்சம் மட்டும் அனுமதிக்கலாம்.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2255/2008/இ2</td><td></td></tr>
<tr><td>3</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ6/5130/2019 நாள் 14.12.2020ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2019–20ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு ரூ.2.60 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 22.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரரின்</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சியின் வார்டு எண்.39 குன்றக்குடி அடிகளார் நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல்</td><td rowspan="2">0.80</td><td>Madras Construction</td><td>0.13% குறைவு</td></tr>
<tr><td>R.Marimuthu</td><td>0.75% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இந்நகராட்சியின் வார்டு எண்.21 தேரடித் தெருவில் உள்ள அங்கன்வாடியில் குடிநீர் பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">0.90</td><td>Madras Construction</td><td>0.30% குறைவு</td></tr>
<tr><td>R.Marimuthu</td><td>0.97% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">இந்நகராட்சியின் வார்டு எண்.10 பூமாரியம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல்</td><td rowspan="2">0.90</td><td>Arunai Construction</td><td>0.36% குறைவு</td></tr>
<tr><td>L. Srinivasan</td><td>0.95% அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு: குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.3337/2019/இ1</td><td>தீர்மானம் எண். 211<br>பொருள் எண்.211<br>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>4</td><td>மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ6/9953/2018 நாள் 02.02.2021ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2018–19ல் 2 எண்ணிக்கை பணிகளுக்கு மதிப்பீடு ரூ.1.37 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 19.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மானம் எண். 212<br>சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரரின்</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">இந்நகராட்சியின் பேகோபுரம் 9-வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல்.</td><td rowspan="2">0.87</td><td>Madras Construction</td><td>0.15% குறைவு</td></tr>
<tr><td>R.Marimuthu</td><td>0.70% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இந்நகராட்சியின் பெண்கள் மேனிலைப் பள்ளியில் குடிநீர் பணி மேற்கொள்ளுதல்</td><td rowspan="2">0.50</td><td>Madras Construction</td><td>0.15% குறைவு</td></tr>
<tr><td>R.Marimuthu</td><td>0.70% அதிகம்</td></tr>
</table>
<br>
அலுவலகக் குறிப்பு: குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.5474/2018/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>5</td>
<td>முதன்மை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ந.க.எண்.5878/2020/DO-1 நாள் 29.12.2020ம் தேதிய கடிதத்தில், இந்நகராட்சி வார்டு எண்.01 முதல் 39 வரை உள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரித்தல் மற்றும் இயக்குதல் பணிகளை தனியார் மூலம் ஓராண்டு பராமரிக்க ரூ.109.29 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :<br>
1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>
(ந.க.எண்.3240/2020/இ1)</td>
<td>தீர்மானம் எண். 213 ஒப்பந்தபுள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவு வேண்டி கடித அனுப்பலாம்.</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா நோய் தொடர்பாக 05.07.2021 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில், திருவண்ணாமலை நகரத்தில் 100% கொரோனா நோய் தடுப்பூசி போட்டுக்கொண்ட நகரமாக திருவண்ணாமலை திகழ வேண்டும் என தெரிவித்தார். இதனை தொடர்ந்து 23.07.2021 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் விரைந்து இலக்கினை அடைய அறிவுறுத்தினார்.<br><br>
இதனை தொடர்ந்து கொரோனா நோய் தொற்றிலிருந்து பொது மக்களை காக்க, இந்நகரத்தின் 39 வார்டு பகுதிகளிலும் மருத்துவ முகாம்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து மருத்துவ முகாம்களுக்கும் இரத்த அழுத்த பரிசோதனை கருவிகள் வழங்க வேண்டியுள்ளது. தற்போது நகராட்சி வசம் 6 எண்ணிக்கை இரத்த அழுத்த பரிசோதனை கருவிகள் மட்டுமே உள்ளது. நோயினை கட்டுப்படுத்த அனைத்து வார்டுகளிலும் மருத்து முகாம்கள் அமைப்பதால் மேலும் 10 எண்ணிக்கை இரத்த அழுத்த பரிசோதனை கருவிகள் தேவைப்படுகிறது. இதற்கான தோராய செலவினம் ரூ.15,000/-க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின்</td>
<td>தீர்மானம் எண். 214 அனுமதி வழங்கலாம்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**கோப்பு எண்.எச்1/1343/2020** | |
| **7** | இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், இந்நகரில் வீடுதோறும் குப்பைகள் வாங்கும் பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால், இவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஏற்படும் செலவினத்தை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1289/2021/எச்1 | **தீர்மானம் எண். 215**<br>**பொருள் எண்.215**<br>**அனுமதிக்கலாம். BOV சரி செய்தல்.** |
| **8** | இந்நராட்சிக்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வருவாய் பிரிவிற்கு தேவையான படிவங்கள், சலான்கள், எழுதுப் பொருட்கள் மற்றும் வெள்ளைத்தாள், டோனர்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவிடலாம்.<br>ந.க.எண்.2990/2019/பி4 | **தீர்மானம் எண். 216**<br>**பொருள் எண்.216**<br>**எழுது பொருட்கள் வாங்க ரூ.10.00 இலட்சம் அனுமதிக்கப்படுகிறது.** |
| **9** | மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ6/9953/2018 நாள் 16.02.2021ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2018–19ல் 3 எண்ணிக்கை பணிகளுக்கு மதிப்பீடு ரூ.10.00 லட்சத்துக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்பட்டது. 26.02.2021 அன்று சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடைமுறை விதி அமலுக்கு வந்ததால் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, தேர்தல் நடைமுறை விதி முடிவுற்ற பிறகு 11.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மானம் எண். 217**<br>**பொருள் எண்.217**<br>**சட்டமன்ற பணி உத்திரவு வழங்கலாம்.** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரரின்</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">திருவண்ணாமலை நகரம் திருக்கோவிலூர் ரோட்டில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பணி</td><td rowspan="2">3.00</td><td>New Five Star Water Solutons</td><td>0.15% குறைவு</td></tr>
<tr><td>Best Water Systems</td><td>0.90% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">திருவண்ணாமலை நகரம் தேரடித் தெருவில் உள்ள நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பணி</td><td rowspan="2">4.00</td><td>New Five Star Water Solutons</td><td>0.15% குறைவு</td></tr>
<tr><td>Best Water Systems</td><td>0.90% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">திருவண்ணாமலை நகரம் தியாகி அண்ணாமலை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பணி</td><td rowspan="2">3.00</td><td>New Five Star Water Solutons</td><td>0.15% குறைவு</td></tr>
<tr><td>Best Water Systems</td><td>0.90% அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு: குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.5474/2018/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், 1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்–249 ன்படி, அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் (அ) வியாபரங்கள் உரிமம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் புதுபித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வந்தது.<br>
ஆனால், கொரோனா இரண்டாவது அலை நோய் தொற்று பரவுவதை தடுத்திடும் வகையில் தமிழக அரசு அறிவித்த ஊரடங்கின் காரணமாக தொழில் நிறுவனங்கள் 2021ம் ஆண்டிற்கான அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் (அ) வியாபாரங்கள் உரிமம் புதுப்பித்தல் மேற்கொள்ள இயலவில்லை. தற்போது, அரசு ஆணை (எம்.எஸ்) எண்.33 குறு, சிறு மற்றும் நடுத்தர வர்த்தகம் துறை நாள் 01.06.2021ல் உரிமம் புதுப்பித்தல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு: பதிவு செய்யலாம், நடவடிக்கை மேற்கொள்ளலாம்.<br>
ந.க.எண்.4111/2021/எச்2</td>
<td>தீர்மானம் எண். 218<br>பொருள் எண்.218<br>D&O புதுப்பிக்க பதிவு செய்யலாம்.</td>
</tr>
<tr>
<td>11</td>
<td>இந்நகராட்சியின் பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்பழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC Workers) 120 நபர்கள் மகளி சுய உதவிக்குழுக்கள் மூலமாக பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் பணியின் போது விபத்துக்கள் அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு</td>
<td>தீர்மானம் எண். 219<br>பொருள் எண்.219<br>30.10.2021 வரை</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நகராட்சியால் செலுத்தஇயலாத நிலை உள்ளதாலும், மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் போது காப்பீடு, தொழிலாள நல நிதி உள்ளிட்ட சட்ட முறையை பின்பற்றுவதில் நடைமுறை சிக்கல் எழுவதாலும், நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுயும் அனைத்து பணியாளர்களையும் தனியார் மூலம் நிரப்ப (Out Sourcing) மேற்கொள்ள வேண்டியதன் அடிப்படையிலும், அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் அவர்களின் 24.10.2017 ஆம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13433/2018/ஜே1 நாள் 17.09.2018ல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு டெங்கு காய்ச்சல் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்தி கொள்ளுமாறு (Out Sourcing) அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையிலும், இந்நகராட்சியின் 120 டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்திக்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிக்கோரி **M/s.HMS** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.10.2020 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணி மேற்கொள்ளப்பட்ட காலங்களில் கொரோனா நோய் தொற்று பரவி வந்த காரணத்தால், நகரமன்ற தீர்மான எண்.187 நாள் 07.06.2021ல் மன்ற அனுமதி பெறப்பட்டு, மேலும் இரண்டு மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு, தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>தற்பொழுது அவர்களின் பணிக்காலம் 11.08.2021 ஆம் தேதியில் நிறைவடைவதால், தற்போதும் கொரோனா நோய் தொற்று பரவி வருவதால் ஒப்பந்தப்புள்ளி கோரி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என்பதாலும் 12.08.2021 முதல் 31.10.2021 வரையிலான காலங்களுக்கு மட்டும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்தாரின் 18.09.2020 நாளது ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே மேலும் மேற்கண்ட காலத்திற்கு **M/s.HMS** என்ற நிறுவனத்தின் மூலம் பணி வழங்க ரூ.34.50 இலட்சம் செலவினத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/s.HMS, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்திற்கு 12.08.2021 முதல் 31.10.2021 வரையிலான காலத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். எவ்வித உரிமையும் நகராட்சியில் கோரமாட்டோம் எனும் உறுதிமொழி ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்யவும், டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள பழைய ஒப்பந்த தொகையின்படியே அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2692/2016/எச்1** | **நீட்டிப்பு வழங்க டெங்கு ஒழிப்பு பணிபுரிய அனுமதி வழங்கலாம்.** |

**12**

திருவண்ணாமலை நகராட்சி 13.64 ச.கிமீ. பரப்பளவில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,45,278 தற்பொழுது 1,52,380 மக்கள் தொகையுடன் 39 வார்டுகளில் 34380 குடியிருப்புகளுடனான சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவிற்கேற்ப போதுமான தூய்மை பணியாளர்கள் அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(ME–1), நாள் 18.01.2007ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயலாற்ற ஏற்கனவே மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் ஊதிய விகிதத்தில் 301 தினக்கூலி தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ள அனுமதி கோரியதில், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் K.Dis.No.3235/P3/2017 நாள் 24.03.2017 செயல்முறை ஆணையில் மூன்றாண்டுகளக்கு பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க இந்நகராட்சி தூய்மை பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கிரின்வாரியார், திருவள்ளுவர், சென்னை என்ற நிறுவனத்திற்கு 15.05.2018 முதல் பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு அந்நிறுவனத்தின் பணிக்காலம் 14.06.2021 உடன் முடிவடைந்து 14.08.2021 வரையில் முதல் முறையும் தற்போது 30.09.2021 வரையிலும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் விவரம் | | 101 அரசாணைப்படி விகிதம் | துப்புரவு பணியாளர் விகிதம் கணக்கீடு | | தேவைப்படும் துப்புரவு பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | சுகாதாரபணியாளர்கள் | | | | | |
| 1 | A | வீடு தோறும் குப்பை சேகரிக்கும் பணி | 250 குடியிருப்புகளுக்கு (அ) 3 கி.மீ. சாலைக்கு வீடுகள் | 34380 | 34380 / 250 x 3 | 412 |
| | B | வாகனங்கள் | | | | |
| | | டிப்பர் வாகனம் (இயக்கத்தில் உள்ளது) | வாகனம் ஒன்றுக்கு 4 பணியாளர்கள் | 1 | 4 | 4 |
| | 2 | காம்பாக்டர் (இயக்கத்தில் உள்ளது) | வாகனம் ஒன்றுக்கு 2 பணியாளர்கள் | 4 | 4 x 2 | 8 |

**தீர்மானம் எண். 220**
**அனுமதிக்கப்படுகிறது.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 3 | டம்பர் பிளேசர் | வாகனம் ஒன்றுக்கு 1பணியாளர் | 3 | 1 x 1 | 1 | |
| | 4 | டாடா ஏஸ் (LCV) | வாகனம் ஒன்றுக்கு 3 பணியாளர்கள் | 12 | 12 x 3 | 36 | |
| | 6 | Sullage Tankers (Proposed) | வாகனம் ஒன்றுக்கு 1 பணியாளர் | 0 | 0 | 0 | |
| | 7 | JCB | வாகனம் ஒன்றுக்கு 1பணியாளர் | 2 | 2 x 1 | 2 | |
| | C | உரக்கிடங்கு | | | | | |
| | | நுண்ணுயிர் கூடம் | உரக்கிடங்கு ஒன்றுக்கு 4 பணியாளர்கள் | 12 | 12 x 4 | 48 | |
| | D | பேருந்து நிலையம் | | | | | |
| | 1 | கழிவறை பராமரிப்பு | கழிவறை ஒன்றுக்கு 2 பணியாளர் | 3 | 3 x 2 | 6 | |
| | 2 | தூய்மைப்பணி ( சுழற்சி முறை) | 4 பணியாளர்கள் | 1 | 4 x 2 (சுழற்சி பணி) | 8 | |
| | E | சந்தைப்பகுதிகள் | | | | | |
| | 1 | காய்கறி அங்காடி | அங்காடி ஒன்றுக்கு 1 பணியாளர் | 1 | 1 | 1 | |
| | 2 | பூ அங்காடி | அங்காடி ஒன்றுக்கு 1 பணியாளர் | 1 | 1 | 1 | |
| | F | கழிவறைகள் பராமரிப்பு | | | | | |
| | 1 | பொது கழிவறை | கழிவறை ஒன்றுக்கு 1 பணியாளர் | 26 | | 26 | |
| | 2 | சமுதாய கழிவறை | கழிவறை ஒன்றுக்கு 1 பணியாளர் | 11 | | 11 | |
| | G | பைலேரியா பிரிவு | 10000 மக்கள் தொகைக்கு ஒரு பணியாளர் | 1,45,278 | | 15 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | H | நகராட்சி அலுவலக பராமரிப்பு | 4 பணியாளர்கள் | 1 | 1 x 4 | 4 |
| | | முக்கிய சாலைகள் | 1.போளூர் சாலை,<br>2.அவலூர்பேட்டை சாலை,<br>3.மத்தளங்குளத்தெரு,<br>4.சின்னகடைத்தெரு,<br>5.தேரடித்தெரு,<br>6.திருவூடல் தெரு,<br>7.பேகோபுரத்தெரு,<br>8.பெரியதெரு,<br>9.சோமவாரகுளத்தெரு,<br>10.செங்கம் சாலை,<br>11.திருமஞ்சனத்தெரு,<br>12.மணலூர்பேட்டை சாலை,<br>13.திருக்கோவிலூர் சாலை, 14.பைபாஸ் சாலை, 15.வேட்டவலம் சாலை, 16.திண்டிவனம் சாலை | 16 | 16 x 2 | 32 |
| **மொத்தம் தேவையான பணியாளர்கள்** | | | | | | **615** |
| நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட துப்புரவுபணியாளர்கள் பணியிடம் | | | | | | 144 |
| நகராட்சி தூய்மைப்பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் | | | | | | 615 |
| நகராட்சியில் தற்பொழுது பணிபுரியும் நிரந்தர துப்புரவுப்பணியாளர்கள் | | | | | | 75 |
| தற்பொழுது நகராட்சிக்கு தேவைப்படும் பணியாளர்கள் | | | | | | **540** |

**தற்காலிக தூய்மை பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவதால் உண்டாகும் ஒருவருடத்திற்கு ஒரு நபருக்கான செலவினங்கள் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் தினக்கூலி பட்டியல் படி தூய்மை பணியாளர்களுக்கு 2020–21 ஆம் ஆண்டுக்குரிய தினக்கூலி | ரூ.383 |
| 2 | ஒரு தூய்மை பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி (383 x 365) | 1,39,795 |
| | EPF 13% | 18,173 |
| | ESI 3.25% | 4,543 |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு 1 ஆண்டுக்குரிய தொகை | 1,500 |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | 6,990 |
| | மொத்தம் | 1,71,001 |
| 3 | 540 தூய்மை பணியாளர்களுக்கு 1 ஆண்டுக்குரிய செலவினம் 171001 x 540 | **9,23,40,540** |

நிரந்தரப்பணியாளர்கள் நகராட்சியின் மூலம் நியமிப்பதாலும், ஒப்பந்தப்புள்ளி கோருவதாலும் ஏற்படும் வித்தியாசத்தொகை ரூ.**3,28,46,580** (ரூபாய் மூன்று கோடியே இருபத்தி எட்டு இலட்சத்து நாற்பாத்தாராயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்) அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| **வ.எண்.** | **நிரந்தர தூய்மை பணியாளர்கள் செலவினம்** | | **ஒப்பந்த அடிப்படையிலான தூய்மை பணியாளர்கள் செலவின விவரம்** | |
|---|---|---|---|---|
| 1 | அடிப்படை ஊதியம் + தர ஊதியம் | 15700 | ஒரு தூய்மை பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி (383 x 365) | 1,39,795 |
| 2 | அகவிலைப்படி ஊதியம் | 2669 | EPF 13% | 18,173 |
| 3 | வீட்டு வாடகைப்படி | 450 | ESI 3.25% | 4,543 |
| 4 | மருத்துவப்படி | 300 | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு 1 | 1,500 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆண்டுக்குரிய தொகை | |
| 5 | இதரம் | 200 | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | 6,990 |
| நபர் ஒருவருக்கு (ஒரு மாதத்திற்கு) | | 19,319 | | |
| நபர் ஒருவருக்கு (ஓராண்டுக்கு) | | 2,31,828 | நபர் ஒருவருக்கு (ஓராண்டுக்கு) | 1,71,001 |
| 540 x 231828 | | 12,51,87,120 | 540 x 173098 | 9,23,40,540 |

| | |
|---|---|
| **நிரந்தர தூய்மை பணியாளர்கள் செலவினம் (ஓராண்டுக்கு)** | **12,51,87,120** |
| **ஒப்பந்த அடிப்படையிலான தூய்மை பணியாளர்கள் செலவின விவரம் (ஓராண்டுக்கு)** | **9,23,40,540** |
| **வித்தியாசம்** | **3,28,46,580** |

அரசாணை எண்.(நிலை) 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.04.1997ன்படி இந்நக்கராட்சியில் தூய்மை பணியினை மேற்கொள்ள 540 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படுவதாலும் உலக பிரசித்த பெற்ற அருள்மிகு ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள ஆன்மீக சுற்றுலாத்தலத்திற்கு பௌர்ணமி மற்றும் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 10 இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்களும் நாள்தோறும் 50000 வெளியூர்வாசிகள் (Floating Population) வந்து செல்வதாலும் நகராட்சி நிதிச்சுமையின் காரணமாக நிரந்தர பணியாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த ஒரு வருடத்திற்கு ரூ.12.50 கோடி செலவினம் மேற்கொள்ள இயலாது என்பதாலும் நகராட்சியில் போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அவர்களால் வெளியிடப்படும் தினக்கூலி நிலைக்கேற்பவும் அரசின் உத்தரவில் வழங்கப்படும் நிபந்தனைக்களுக்குட்பட்டும் ஒப்பந்த முறையில் தனியார் மூலம் தூய்மை பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள உரிய உத்தரவு வேண்டி பிரேரணை அனுப்பவும் அதற்கான செலவினத்தொகை ஒரு வருட காலத்திற்கு ரூ.9.75 கோடியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

| | | |
|---|---|---|
| | 1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கலாம்.<br>2. பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.<br>**கோப்பு எண்.1661/2020/எச்1** | |
| **13** | சிறப்புநிலை நகராட்சியான திருவண்ணாமலை சிறப்புநிலை நகராட்சியில் அரசாணை எண். 19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME-1)நாள். 18.01.2007-ன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் , திருவண்ணாமலை அவர்களின் ஊதிய விகிதத்தில் 301 தினக்கூலி பணியாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணிமேற்கொள்ள அனுமதி கோரியதில், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் K.Dis.No.3253/P3/2017 நாள்.24.03.2017 செயல்முறை ஆணையில் மூன்றாண்டுகளுக்கு பணிமேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் உத்திரவிற்கிணங்க, இந்நகராட்சியில் தூய்மைப் பணிமேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கிரின் வாரியர், திருவள்ளூர் ,சென்னை என்ற நிறுவனத்திற்கு 15.05.2018 முதல் பணிமேற்கொள்ள உத்திரவிடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு அந்நிறுவனத்தின் பணிக்காலம் 14.06.2021 உடன் முடிவடைந்தது<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் உத்திரவின்படி,ஒப்பந்த அடிப்படையிலான பணிக்காலம் மூன்றாண்டுகள் நிறைவடைவதால், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி 14.08.2021 ஆம் தேதிவரை இரண்டு மாதங்களுக்கு ஏற்கனவே, உள்ள ஒப்பந்ததாரர் கிரின் வாரியர்,திருவள்ளூர்,என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண். 186 நாள்.07.06.2021 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே, இரண்டு மாத காலம் 14.08.2021 அன்று முடிவுவடைய உள்ளதால் தற்பொழுதிய கொரோனா காலகட்டத்தை முன் நிறுத்தி வரி வசூலில் நிலுவையின் காரணமாக ஒரு மாத காலத்திற்க 100 பணியாளர்களை குறைத்து 15.09.2021 வரையிலும் 16.09.2021 முதல் மூன்று காலத்திற்கு 250 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிமேற்கொள்ள அவசரம் அவசியம் கருதி அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவினம் (31.10.2021 வரை) ரூ.1,50,00,000/- மன்றத்தின், அதற்கான செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 221**<br>**பொருள் எண்.221 Green Warrior பணி நீட்டிப்பு 31.10.2021 வழங்கி அனுமதிக்கப்படுகிறது.** |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்படும் கருத்துருவின் மேல் பெறப்படும் ஆணையை பொறுத்து மாற்றி அமைக்கலாம். அதுவரை ஒரு மாத காலத்திற்க 100 பணியாளர்களை குறைத்து 15.09.2021 வரையிலும் 16.09.2021 முதல் 31.10.2021 வரை 250 பணியாளர்களை out sourcing மூலம் பணியமர்த்தி துப்புரவு பணிமேற்கொள்ள அனுமதி வழங்கலாம். எவ்வித உரிமையும் நகராட்சியில் கோரமாட்டோம் எனும் உறுதிமொழி ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்யவேண்டி மாவட்ட ஆட்சியர் தினகூலி ஊதிய விகிதத்தில் இதர பயன்களுடன் அனுமதிக்கலாம்.<br>3. இதற்கான செலவினம் ரூ.1,50,00,000/– ஐ பொதுநிதியிலிந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1661/2021/எச்1)** | |
| **14** | தலைவர் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம், சென்னை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின்படி, திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரத்தில் தள்ளுவண்டி மூலம் காய்கறிகள், பழங்கள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை விற்பனை செய்ய ஏதுவாக தள்ளுவண்டிகள் கொள்முதல் செய்ய வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.776 / 2021 / இ1 | **தீர்மானம் எண். 222**<br>**அனுமதித்து பதிவு செய்யலாம்.** |
| **15** | நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் மூலம் இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டு பயன்படுத்தி வரும் CUG எண்களுக்கான (7397392669, 7397392670) மாதாந்திர கட்டணம் தோராயமாக ஒரு இணைப்புக்கு ரூ.500/– வீதம் இரண்டு எண்களுக்கு ரூ.1000/– வீதம் ஆண்டிற்கு ரூ.12,000/– தொலைபேசி கட்டணமாக நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியிலிருந்து செலவிடலாம்.<br>ந.க.எண்.001/2012/சி1 | **தீர்மானம் எண். 223**<br>**அரசின் தொலைபேசி இணைப்பு என்பதால் அனுமதி வழங்கலாம்.** |
| **16** | இந்நகராட்சிக்கு 2020 – 2021 ஆம் ஆண்டிற்கு ஆண்டு குத்தகை இனங்கள் மொத்தம் 12 எண்ணிக்கைகள் உள்ளது. இவற்றிக்கான குத்தகை காலம் 31.03.2021ம் தேதியுடன் முடிவடைவதாலும், 2021ம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தல் 06.04.2021 தேதியில் நடைபெற்ற காரணத்தினால் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினாலும் பொது ஏலம் கோர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. | **தீர்மானம் எண். 224**<br>**பொருள் எண்.224**<br>**அனுமதிக்கப்படுகிறது.** |

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.5304/2021/ஆர்2 நாள் 16.03.2021ந் தேதிய சுற்றறிக்கையில், 06.04.2021 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சி / நகராட்சிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் காலம் வரை நிறுத்திவைக்கவும், அவ்வினங்களை தற்போது ஏலம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும், அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலிது வரும் தொகையினை வசூலிக்குமாறும், முந்தைய குத்தகைதாரர்கள் குத்தகை இனங்களை தொடர்ந்து நடத்த விரும்பாத இனங்களில் துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| இனம் எண். | ஆண்டு குத்தகை இனங்களின் விபரம் |
|---|---|
| 1 | மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் |
| 2 | மத்திய பேருந்து நிலையத்தில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் |
| 3 | மத்திய பேருந்து நிலையத்தில் (டி.வி) தொலைக்காட்சி வைத்து விளம்பரம் |
| 4 | மத்திய பேருந்து நிலையத்தின் தென்புறம் அமைக்கப்பட்டுள்ள மிதிவண்டி மற்றும் மொபட் நிலையம் கட்டணம் |
| 5 | நகராட்சி மன்ற தினசரி காய்கறி மார்க்கெட்டில் சிவன்படத் தெரு சந்தில் தற்காலிக கடைகளில் கட்டணம் |
| 6 | நகராட்சி எல்லைக்குள் வரும் சுற்றுலா மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 7 | சாலையோர தற்காலிக கடைகளில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமை |
| 8 | நகராட்சி ஐ.யு.டி.பி. டிரக்டெர்மினல் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 9 | ஈசான்யத்தில் கட்டப்பட்டுள்ள ஆடுகள் அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை |
| 10 | முத்துவிநாயகர் கோவில் தெரு முதல் தளம் தங்கும் அறைகள் 1 முதல் 10 வரை 16x10 அளவு கொண்டது 10 அறைகள் ஒரே இனமாக குத்தகை |
| 11 | ஈசான்யம் தற்காலிகப் பேருந்து நிலையத்தில் டெம்போ, போர்வெல் லாரி, நான்கு சக்கர வாகனம் ஆகியவற்றிற்கு வாகனம் நிறுத்த கட்டணம் |
| 12 | முத்துவிநாயகர் கோவில் தெரு TMC தங்கும் விடுதி மற்றும் நகர்நல அலுவலர் குடியிருப்பு சுற்றுச்சுவர் ஒட்டியுள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் |

மேற்கண்ட 12 ஆண்டு குத்தகை இனங்களுக்கு மூன்றாம் ஆண்டான 2020–2021 ஆம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை இவ்வலுவலக அறிவிப்புகள் ந.க.எண்.235/2018/அ1 நாள் 17.03.2020, 21.09.2020 மற்றும் 12.03.2021 ஆகியவை மூலமாக செலுத்த கோரியும், பலமுறை நேரில் தெரிவித்தும் இதுநாள் வரை செலுத்தப்படாமல் இனம் 1,3,5,6,8,9 மற்றும் 11 நிலுவையாக உள்ளது. இவற்றில் இனம் 2,4,7,10 மற்றும் 12 நிலுவையின்றி செலுத்தி உள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளதற்கிணங்க, இந்நகராட்சியில் உள்ள ஆண்டு குத்தகை இனங்கள் தேர்தல் நடத்தை விதிகளால் பொது ஏலம் கோர இயலாத காரணத்தால் முந்தைய குத்தகைதாரர்கள் விருப்பம் தெரிவித்தால் நீட்டிப்பு செய்து கொடுக்க அனுமதி வழங்கியுள்ளார். அதன்படி மேற்படி 5 குத்தகைதாரர்களுக்கும் அறிவிப்பு செய்யப்பட்டதில் இனம் 4,7,10 மற்றும் 12 இல் உள்ள குத்தகைதாரர்கள் மட்டும் விருப்பம் தெரிவித்து நீட்டிப்பு கோரியுள்ளார்கள். எனவே, தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ள காலம் வரை நீட்டிப்பு செய்து கொடுக்கலாம் எனவும், அதற்கான தொகையை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும், மீதமுள்ள இனங்களில் வ.எண்.2 இல் உள்ள இனத்தின் முந்தைய குத்தகைதாரர் விருப்பம் தெரிவிக்கவில்லை. இவ்வினத்தையும், வ.எண்.3 இல் உள்ள இனத்தையும் துறை மூலம் வசூல் செய்ய வழிவகை இல்லை என வருவாய் ஆய்வாளர் தனது குறிப்பில் தெரவித்துள்ளதால், அவ்வினங்களை தற்காலிகமாக நகராட்சி வசம் எடுத்து கொண்டு பொது ஏலம் கோரும் போது அனைத்து இனங்களுடன் சேர்த்து மேல்நடவடிக்கை எடுக்கலாம். மேலும், வ.எண்.1,5,6,8,9 மற்றும் 11 ஆகிய 6 இனங்களை துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கு தேவையான ரசீது புத்தகங்கள் அச்சிட ஆகும் செலவினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. இனம் எண்.4,7,10 மற்றும் 12 ஆகிய 4 இனங்களை தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்து காரணத்தினாலும், தொடர்ந்து ஏலம் கோர எவரும் முன்வராத காரணத்தினாலும் மேற்படி 4 இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குத்தகை இனங்கள் மீண்டும் ஏல தாரர்களுக்கு ஒப்படைக்கும் காலம் வரை நீட்டிப்பு செய்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இனம் எண்.1,5,6,8,9 மற்றும் 11–ஐ 01.04.2021 முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு

<table>
<tr>
<td></td>
<td>
வருவதற்கும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குத்தகை இனங்கள் மீண்டும் ஏல தாரர்களுக்கு ஒப்படைக்கும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
4. இனம் எண். (2) மத்திய பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் மற்றும் (3) மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் ஆகிய இரண்டு குத்தகை இனங்களை தொடர்ந்து நடத்த தொழில்நுட்ப வசதிகள் மற்றும் உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் துறை மூலம் வசூல் செய்ய வழிவகை இல்லை என்பதால் தற்காலிகமாக செயல்படாமல் நகராட்சி வசம் எடுத்துக்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
5. துறை மூலம் வசூலிக்க தேவையான இரசீது புத்தங்கள் அச்சடித்து கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
(ந.க.எண். 550 / 2021 / அ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17</td>
<td>
கூடுதல் ஆட்சியர் (வ) / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்.அ1 / 7447 / 2019 நாள் 14.07.2021 ன்படி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020 கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>பகவான் நகரில் தார்சாலை அமைத்தல்</td><td>25.00</td></tr>
<tr><td>2</td><td>மகாலட்சுமி நகரில் தார்சாலை அமைத்தல்</td><td>25.00</td></tr>
</table>
<br>
அலுவலகக் குறிப்பு : பதிவு செய்யலாம்.
</td>
<td>தீர்மானம் எண். 225<br>பதிவு<br>செய்யப்படுகிறது.<br>பகவான் நகர்,<br>மகாலட்சுமி நகர்<br>நிர்வாக அனுமதி.</td>
</tr>
</table>

ஆணையாளர்,
திருவண்ணாமலை நகராட்சி.